சுருக்கம்

தொடக்கக் கல்வி – தொடக்கக் கல்வி இயக்ககம் மற்றும் சார்நிலை அலுவலகங்களில் உள்ள தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2012 முதல் 31.12.2014 வரை பணி நீட்டிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (ஆர்1) துறை

அரசாணை (1டி) எண்.183

நாள்: 12.06.2012
திருவள்ளுவர் ஆண்டு 2043
வைகாசி 30

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (வாலாயம்) எண்.76, பள்ளிக் கல்வி (ஆர்1) துறை, நாள் 24.04.2009.
2. தொடக்கக்கல்வி இயக்குநரின்கடித ந.க. எண்.035604/அ1/2011,நாள் 13.01.2012.

-----

ஆணை:-

மேலே படிக்கப்பட்ட அரசாணையில் தொடக்கக் கல்வி இயக்ககம் மற்றும் சார்நிலை அலுவலகங்களில் உள்ள இணைப்பில் குறிப்பிடப்பட்ட 1185 பணியிடங்களுக்கு 01.01.2009 முதல் 31.12.2011 முடிய உள்ள காலங்களுக்கு பணி நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2. தொடக்கக் கல்வித் துறையில் பல்வேறு அலுவலகங்களில் உள்ள மேற்காணும் அரசாணையில் அனுமதிக்கப்பட்ட 1185 பணியிடங்களுக்கு (இணைப்பு I-III வரை) 01.01.2012 முதல் 31.12.2014 வரை 3 ஆண்டுகளுக்கு பணி நீட்டிப்பு செய்து ஆணை வழங்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. தொடக்கக் கல்வி இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டது. மேலே பத்தி இரண்டில் (இணைப்பு I –III வரை) குறிப்பிடப்பட்ட தற்காலிகப் பணியிடங்களுக்கு 01.01.2012 முதல் 31.12.2014 வரை பணி நீட்டிப்பு செய்து ஆணை வழங்கப்படுகிறது. இவ்வாணையில் பணிநீட்டிப்பு வழங்கும் அனைத்துப் பணியாளர்களும் சம்பளம் அகவிலைப்படி மற்றும் இதர படிகள் அவ்வப்போது வெளியிடப்படும் ஆணைகளின் அடிப்படையில் பெறத் தகுதியுடையவராகிறார்கள்.

4. மேலே பத்தி இரண்டில் குறிப்பிடப்பட்ட பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்புக்களின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

(i) இணைப்பு I, III க்கான கணக்குத் தலைப்பு :

"2202 – பொதுக்கல்வி – 01 – தொடக்கக் கல்வி – 001 –நெறிப்படுத்தலும் நிருவாகமும் – I திட்டத்தில் சேராதது – AA தொடக்கக் கல்வி இயக்ககம் – 01 சம்பளங்கள் " (த தொ கு 2202–01–001–AA- 0107)

www.TeacherTN.com

(ii) <u>இணைப்பு II க்கான கணக்குத் தலைப்பு :</u>

"2202 – பொதுக்கல்வி – 01 – தொடக்கக் கல்வி – 104 – ஆய்வு I - திட்டத்தில் சேராதது– AA - மாநிலத் தொடக்கக் கல்வி சார்நிலை அதிகாரிகள் – 01 சம்பளங்கள் "
(த தொ கு 2202–01–104–AA-0109)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.27880/கல்வி–II/2012 நாள் 08.06.2012ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த.சபிதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
சம்பந்தப்பட்ட மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
கருவூலக் கணக்கு ஆணையர், சென்னை–15.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு/கிழக்கு), சென்னை.
சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர்கள்.
நகல்
நிதி (கல்வி II) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/6/2012
அரசு சார்புச் செயலாளர்.
15.6.12

ந.க.எண் 035604/அ1/2011 நாள் -6-12

நகல் அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு தக்க நடவடிக்கை பொருட்டு அனுப்பப்படுகிறது.

21/6/12

தொடக்கக் கல்வி இயக்குநருக்காக,
சென்னை–6.
21/6/2012
21/6/12.

பெறுநர்
அனைத்து மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள்.

www.TeacherTN.com